# தரம் - 10

## அலகு - 1
## நீதிப்பாடல்கள்



# தமிழ்மொழியும் இலக்கியமும்

## விவேக சிந்தாமணி

MR .S.ROBERT
CP/W/BHARATHI TAMIL MAHA VIDYALAYAM
WATTEGAMA

## உள்ளே ....

நீதிப்பாடல் என்றால் என்ன ?

விவேக சிந்தாமணி பற்றிய விளக்கம்

செய்யுள்

பதவுரை

அருஞ் சொற்பொருள்

பொருள்

புல்லரின் இயல்பு

அறிவுடையாரின் இயல்பு



நீதிப்பாடல்கள் என்பது …..

வாழ்க்கையைச் செம்மையாக்கும்
சீரிய நற்கருத்துக்களையும் வாழ்வாங்கு
வாழ்வதற்கான ஒழுக்க நெறிகளையும்
எடுத்துக் கூறுவன நீதிப்பாடல்களாகும்.



# விவேக சிந்தாமணி

- விவேக சிந்தாமணி ஒரு தொகுப்பு நூலாகும்
- சிந்தாமணி என தமிழில் பல நூல்கள் இருந்ததால் இந்நூல் விவேக சிந்தாமணியாயிற்று
- பல்வேறு சந்தர்ப்பங்களில் புலவர்கள் பாடிய பல தனிப்பாடல்களின் தொகுப்பே இந்நூலாகும்.
- இதில் பல நூல்களில் இருந்து எடுத்த பாடல்களும் , பிற்காலத்தில் பலர்பாடிய பாடல்களும் தொகுக்கப்பட்டடுள்ளன.
- இது ஒரு பல்திரட்டு நூலெனலாம்.
- இந்நூலினை தொகுத்தவர் யாரென அறிய முடியவில்லை.
- அதுப் போல் பாடல்களை இயற்றியவர் பாடல் எழுந்த சூழல் ஆகியவற்றையும் குறிப்பிடவில்லை.
- கடவுள் வாழ்த்துடன் 135 பாடல்கள் உள்ளன.
- நீதி பற்றிய பாடல்களே இவற்றுள் அதிகம்
- இந்நூலின் 9 ஆம் பாடலில் உள்ள புல்லரின் இயல்பு பற்றி கூறும் பாடல் இதுவாகும் .



தரம் 10 தமிழ்மொழியும் இலக்கியமும் நீதிப்பாடல்கள்





தரம் 10 தமிழ்மொழியும் இலக்கியமும் நீதிப்பாடல்கள்







தரம் 10 தமிழ்மொழியும் இலக்கியமும் நீதிப்பாடல்கள்





# செய்யுள்

தண்டாமரையினுடன் பிறந்தும் தண்டேன்
நுகரா மண்டுகம்
வண்டோ கானத்திடையிருந்து வந்து
கமலமதுவுண்ணும்
பண்டே பழகியிருந்தும் அறியார்
புல்லர் நல்லோரைக்
கண்டே களித்தங் குறவாடி தம்மிற்
கலப்பர் கற்றோரே .

# பதவுரை

மண்டுகம் தண் தாமரையின் உடன் பிறந்தும்

தன் தேன் நுகரா

வண்டோ கானத்து இடை இருந்து வந்து

கமல மது உண்ணும்

பண்டுபழகி இருந்தாலும் புல்லர்

நல்லோரை அறியார்

கற்றோர் அங்கு கண்டு

களித்து உறவு ஆடி தம்மின் கலப்பர்.

கற்றோரே

## அருஞ் சொற்பொருள்

| | | |
|---|---|---|
| மண்டுகம் | - | தவளை |
| மது | - | தேன் |
| கானத்து | - | காடு |
| தண் | - | குளிர்ச்சி |
| புல்லர் | - | அறிவற்றவர் |
| களித்து | - | மகிழ்ந்து |
| நுகரா | - | உண்ணாத |
| கமலம் | - | தாமரை |
| பண்டு | - | முன்பு |

# பொழிப்புரை

தவளை குளிர்ச்சி பொருந்திய தாமரையுடன் ஒன்றாகப் பிறந்து தண்ணீரில் வாழ்ந்தாலும் அத்தாமரையில் உள்ள குளிர்ந்த தேனை உண்பதற்கு அறியாதிருக்கும். ஆனால் வண்டுகளோ தாம் வாழும் காட்டில் இருந்து வந்து அத்தாமரை மலரின் உள்ள தேனை உண்ணும். அதுபோல நீண்ட நாட்களாக பழகியிருந்தாலும் அறிவில்லாதவர்கள் நல்லவர்களின் அரிய உயர்ந்த பண்புகளை அறிய மாட்டார்கள். கற்றிந்தோர் நல்லவர்களை பார்த்தவுடனேயே அவர்களின் நற்பண்புகளை தெரிந்துக் கொண்டு மகிழ்ந்து நட்புக் கொண்டு அவர்களுடன் ஒன்றாக சேர்த்துக் கொண்டு வாழ்வார்கள்

## புல்லர்களின் இயல்பு



தாமரையுடன் வாழ்ந்தும் அதன் மலரிலுள்ள தேனைக் குடிக்கவியலா அறியாமைக் கொண்டிருப்பது போல அறிவற்றவர்கள் அறிவுடையோருடன் பல நாள் பழகியிருந்தும் அவர்தம் நற்பண்புகளை புரிய முடியாத அறியாமை கொண்டிருப்பதற்கு தவளையின் செயற்பாட்டிற்கு உவமிக்கப்படுகிறது.

## அறிவுடையவர் இயல்பு



வண்டு காட்டில் வாழ்ந்தாலும் அங்கிருந்து வந்து தாமரை மலரில் உள்ள தேனை உண்ணக் கூடிய அறிவுடைமைக் கொண்டிருப்பது போல அறிவுடையவர்கள் கற்றோரைக் கண்டவுடன் புரிந்துக் கொண்டு மகிழ்ந்து உறவாடும் தன்மை கொண்டிருப்பதனை வண்டுகளின் இயல்பிற்கு ஒப்பிடப்பட்டுள்ளது. ஆகவே வண்டுகளின் செயல் போல அறிவுடையாரின் செயல்கள் அமையுமென இங்கு உணர்த்தப்பட்டுள்ளது.

வினா

1 . அறிவுடையவர் இயல்புகளை விளக்குக ?

2 . அறிவற்றவரின் இயல்புகளை விளக்குக ?

3 . பின்வரும் செய்யுள் மூலம் கவிஞர் கூற விளையும் செய்தி என்ன?

4 . தண்டாமரையுடன் பிறந்தும் தண்டேன் நுகரா மண்டுகம் என்பதில் இடம் பெறும் அணியை விளக்குக

இத்துடன் பின்வரும் இணைப்பினை அழுத்தி வினாக்களுக்கு விடை தருக

https://docs.google.com/forms/d/1Zw4O9l2suxH9mGtWziQe
29wKcL1W5XuGzFcxTxnkXa8/edit